P5

. Primary School

# Primary 5 : Semester Assessment 1

## Tamil Language Paper 2

Name : ______________________

Class : 5 / ____

Date : ______________

Marks : ____ / 46

**Booklet A**

Name of setter : Mr K. Parathi

23 Questions 46 Marks

Total Time : 1 h 40 min

This booklet consists of 9 pages

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

ANSWER ALL THE QUESTIONS.

Parent's Signature : ______________________

Date : ______________________

116

www.testpapersfree.com

<u>Primary - 5</u>  <u>SA - 1 Paper - 2</u>

<u>பாபு என்ற சிறுவன்.........</u>

1. 2 2. 1 3. 2 4. 4 5. 3 6. 4

7. 4 8. 3 9. 1 10. 2 11. 2 12. 1

13. 4 14. 2 15. 3 16. 1 17. 2

18. 3 19. 1 20. 4

21. 3 22. 1 23. 1

24. 4 25. 10 26. 5 27. 8 28. 1

29. 5 30. 1 31. 12 32. 10 33. 3 34. 8 35. 4

36. அண்ணனும் தம்பியும் மீன் பிடித்து வாழ்ந்து வந்தார்கள்.

37. பிச்சைக்காரன் நான்கு நாட்களாக உணவு உண்ணாததால் பிச்சை போடுமாறு கெஞ்சினான்.

38. பிச்சைக்காரன் மீது இரக்கப்பட்ட அண்ணன் அவனுக்கு மீன் குழம்புடன் வயிறார உணவு அளித்தான்.

39. பிச்சைக்காரன் உழைத்துப் பிழைக்க வேண்டும் என்பதால் தூண்டில் போட்டு எப்படி மீன் பிடிப்பது என்று கற்றுக் கொடுக்க தம்பி அவனைக் குளத்திற்கு இழுத்துச் சென்றான்.

40. தன் நிலை உயர தம்பி காரணமாக இருந்ததால் அவனுக்குத் தங்கத் தூண்டிலும் தங்க வலையும் பரிசுப் பொருள்களாகக் கொடுத்துவிட்டுச் செல்ல செல்வன் அந்த இருவரின் வீட்டிற்கும் வந்தான்.

41. இரண்டு நாள்களாக அன்புடன் செல்வனுக்கு உணவு அளித்தும் அவன் நன்றி மறந்ததால் அண்ணன் செல்வன் மீது கோபமடைந்தான்.

115

www.testpapersfree.com

40. செல்வனாக மாறிய பிச்சைக்காரன் அந்த இருவரின் வீட்டிற்கும் வரக் காரணம் என்ன? (4)

41. அண்ணன் ஏன் செல்வன்மீது கோபமடைந்தான்? (4)



www.testpapersfree.com

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. அண்ணனும் தம்பியும் எவ்வாறு வாழ்ந்து வந்தனர்? (2)

37. பிச்சைக்காரன் ஏன் கெஞ்சினான்? (3)

38. பிச்சைக்காரன் மீது இரக்கப்பட்ட அண்ணன் என்ன செய்தான்? (3)

39. தம்பி பிச்சைக்காரனைக் குளத்திற்கு இழுத்துச் செல்லக் காரணம் என்ன? (4)



113

www.testpapersfree.com

D8.சுயவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி

முன்னொரு காலத்தில் அண்ணனும் தம்பியும் ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தார்கள். இருவருமே மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தார்கள். ஒரு நாள் நண்பகல் நேரம். இருவரும் வழக்கம்போல் உணவு உண்ண அமர்ந்தார்கள். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கு வந்தான். அவனைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. "ஐயா! நான் நான்கு நாளாகப் பட்டினி. ஏதேனும் பிச்சைப் போடுங்கள்", என்று கெஞ்சினான். தம்பி அவன் மீது சிறிதும் இரக்கப்படவில்லை. அண்ணனோ அவனுக்கு மீன் குழம்புடன் வயிறார உணவு அளித்து அனுப்பி வைத்தான்.

அடுத்த நாளும் அந்தப் பிச்சக்காரன் அங்கு வந்தான். அண்ணனும் அவனுக்கு வயிறார உணவளித்து அனுப்பி வைத்தான். 'இந்தப் பிச்சைக்காரனுக்கு இதே வேலையாகப் போய்விட்டது. நாளை அவன் இங்கு வரட்டும்', என்று முணுமுணுத்தான் தம்பி.

மூன்றாவது நாளும் வந்தது. பிச்சைக்காரன் அங்கு வந்தான். தூண்டிலை எடுத்துக் கொண்ட தம்பி அந்தப் பிச்சைக்காரனை இழுத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். சிறிது தொலைவில் இருந்த குளத்திற்கு இருவரும் வந்தார்கள். தூண்டில் போட்டு எப்படி மீன் பிடிப்பது என்று அவனுக்குச் சொல்லித் தந்தான் தம்பி. "இனியாவது உழைத்துப் பிழை. உன்னை என் வீட்டின் அருகில் பார்த்தால் தொலைத்து விடுவேன்", என்று கோபத்துடன் சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான் தம்பி.

அதன் பிறகு அந்தப் பிச்சைக்காரன் அங்கு வரவே இல்லை. ஆண்டுகள் பல சென்றன. செல்வனைப்போல் உடை அணிந்த ஒருவன் அந்த வீட்டிற்கு வந்தான். தம்பியை வணங்கிய அவன்,"உங்களால்தான் நான் இந்த நிலைக்கு வந்தேன். என் அன்பளிப்பாக இந்தத் தங்கத் தூண்டிலையும் தங்க வலையையும் வைத்துக் கொள்ளுங்கள்", என்றான். அந்தப் பிச்சைக்காரந்தான் இப்பொழுது செல்வனாக வந்திருக்கிறான் என்பது அவர்கள் இருவருக்கும் புரிந்தது.

கோபம் கொண்ட அண்ணன், " நீ சாகப் பிழைக்க என் வீட்டிற்கு வந்தாய். நான் அன்பாக உனக்கு உணவளித்து உன்னைக் காப்பாற்றினேன். அடுத்த நாளும் உனக்கு உணவளித்தேன். இந்தப்பரிசுப் பொருள்களை நீ எனக்குத் தான் தந்திருக்க வேண்டும். நன்றி மறந்து விட்டாய். அதை நினைத்து இப்பொழுதாவது அவற்றை எனக்குத் தா", என்றான். ஆனால், அந்தச் செல்வனே, "இந்தப் பரிசுப் பரிசுப் பொருள்கள் உன் தம்பிக்குத்தான் உரியவை. உங்களுக்கு அல்ல", என்றான். அதிர்ச்சி அடைந்த அண்ணன் காரணம் புரியாமல் சிலையாய் நின்றான்.

(மூலம்: 351 நன்னெறிக் கதைகள்)
பண்பு: பிறருக்கு உதவுதல், நன்றியுணர்வு



112

www.testpapersfree.com

## D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் **Q29** முதல் **Q35** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

மக்கள் நடமாட்டம் மிகுந்த அந்தத் தெரு வழியாக மூன்று சக்கர வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தான், பீட்டர். அதில் நிறைய முட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. ஒரு (Q29) ____________ அந்த வண்டி கவிழ்ந்தது. அதில் இருந்த முட்டைகளெல்லாம் கீழே விழுந்து உடைந்து போயின.

Q29 (   )

'ஐயோ! முட்டைகளெல்லாம் வீணாகிப் போயினவே, இனி நான் என்ன செய்வேன்?' என்று அழுது (Q30) ______________ அவன். அப்போது மிதிவண்டியில் அங்கு வந்த பெரியவர் ஒருவர், "ஏன் அழுகிறாய்? உடைந்து போன முட்டைகளுக்கான (Q31) ____________ உன்னால் தர முடியாதா?" என்று கேட்டார்.

Q30 (   )

Q31 (   )

"ஐயா! நானோ ஏழை! என்னால் எப்படி இருநூறு வெள்ளி புரட்ட முடியும்," என்று அழுதான் பீட்டர். பெரியவர், "கவலைப்படாதே! இந்தக் கூட்டத்தில் உனக்கு உதவி செய்யும் இரக்க குணம் படைத்தவர் பலர் உள்ளனர்," என்று சொல்லிவிட்டுத் தன் தோளிலிருந்த துண்டைத் தரையில் (Q32) __________. தன் பையிலிருந்த பத்து வெள்ளியை எடுத்து அந்தத் துண்டில் போட்டார்.

Q32 (   )

அந்தக் கூட்டத்திலிருந்த பலரும் ஒரு வெள்ளி இரண்டு வெள்ளி என்று அந்த (Q33) ____________ போட்டனர். சிறிது நேரத்தில் நிறையப் பணம் சேர்ந்துவிட்டது. பணத்தைப் பெரியவரே எண்ணினார். இருநூறு வெள்ளிக்கு மேல் இருந்தது. அந்தத் தொகையை பீட்டரிடம் தந்த அவர், "இனியாவது (Q34) ______________ நடந்து கொள்," என்று சொல்லிவிட்டு மிதிவண்டியில் ஏறிச் சென்றார்.

Q33 (   )

Q34 (   )

கூட்டம் கலையத் தொடங்கியது. எல்லாவற்றையும் (Q35) ____________ ஒருவன், "தம்பி! அந்தப் பெரியவர் மட்டும் வரவில்லை என்றால் உன் கதி என்னவாகி இருக்கும். என்ன நல்ல குணம் அவருக்கு? அவரை உனக்கு முன்னரே தெரியுமா?" என்று கேட்டான். அதற்குப் பீட்டர், "அவர் என் முதலாளி. இந்த முட்டைகளை எல்லாம் ஏற்றி அனுப்பியவர் அவர்தான்," என்றான்.

Q35 (   )

(மூலம்: வேடிக்கைக் கதைகள்)
(பண்பு: பிறருக்கு உதவுதல்)

| | | |
|---|---|---|
| (1) புலம்பினான் | (2) சந்திப்பில் | (3) துண்டில் |
| (4) பார்த்துக்கொண்டிருந்த | (5) வளைவில் | (6) முணுமுணுத்தான் |
| (7) பொறுப்பாக | (8) கவனமாக | (9) கேட்டுக்கொண்டிருந்த |
| (10) விரித்தார் | (11) பெட்டியில் | (12) தொகையை |



www.testpapersfree.com

Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

'ஆ' பிரிவு

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.
(10 மதிப்பெண்கள்)

Q24 நேற்று மின்னல் தாக்கியதால் ஒரு கட்டடம் தீப்பிடித்து ________________. தீயணைப்பாளர்கள் அத்தீயை அணைக்க முயன்றனர். Q24 (  )

Q25 காட்டில் ________________ தெரியாமல் தொலைந்து போனார் மன்னர். அச்சமயம் அவரைத் தேடி அவருடைய அமைச்சர் வந்தார். Q25 (  )

Q26 என் அத்தையின் திருமணம் ________________ மாதத்தில் நடைபெறும். அது திருமணம் செய்ய உகந்த மாதமாகும். Q26 (  )

Q27 நான் என் குடும்பத்தோடு திடலில் பட்டம் விட்டேன். அப்போது என் பட்டத்தின் கயிறு ________________ அது கீழே விழுந்தது. Q27 (  )

Q28 வேடன் ஒருவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அவன் ஒரு மானைக் கொல்ல ________________ தொடுத்தான். Q28 (  )

| | | | |
|---|---|---|---|
| (1) | கணை | (2) | அருந்து |
| (3) | வலி | (4) | எரிந்தது |
| (5) | ஆனி | (6) | ஆணி |
| (7) | எறிந்தது | (8) | அறுந்து |
| (9) | கனை | (10) | வழி |



110

www.testpapersfree.com

**Q21** முதல் **Q23** வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(6 மதிப்பெண்கள்)**

Q21. திருமண விருந்தளிக்க விரும்பும் ஒருவர் ஏன் தங்கம் உணவகத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?

(1) அனுபவமிக்க சமையற்காரர்களால் உணவு தயாரிக்கப்படுவதால்
(2) இந்தோ சீன உணவுகளை மட்டும் தயாரித்துப் பரிமாறுவதால்
(3) 180 பேர் ஒரே நேரத்தில் அமர்ந்து உணவு உண்ண முடிவதால்
(4) உணவகம் லிட்டில் இந்தியாவில் திறக்கப்பட்டிருப்பதால்

Q22. தங்கம் உணவகம் அனைவரையும் அன்புடன் வரவேற்பதன் காரணம் என்ன?

(1) அவர்களின் மிளகாய்முட்டையைச் சுவைத்துப் பார்க்க
(2) போக்குவரத்துக்குத் தேவையான வாகன வசதிகளுக்குப் பதிவு செய்ய
(3) அனுபவமிக்க சமையற்காரர்கள் உணவு தயாரிப்பதைக் காண
(4) உணவு வகைகளை இலவசமாகச் சுவைத்துப் பார்க்க

Q23. கணினி வசதி இல்லாதவர்கள் எவ்வாறு தங்கள் 'ஆர்டர்களைப்' பதிவு செய்வர்?

(1) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு
(2) சரவணன் என்பவரைச் சந்தித்து
(3) பேருந்தில் பயணம் செய்து
(4) ஒரு முறை உணவகத்திற்குச் சென்று

(அடுத்த புத்தகத்தைப் பார்க்கவும்)



109

www.testpapersfree.com

## B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

# தங்கம் உணவகம்

வடக்கு தெற்கு, இந்தோ சீன உணவுவகைகள்

சிங்கப்பூர் லிட்டில் இந்தியா பகுதியில் மிகப் பெரிய வசதி நிறைந்த உணவகம்.
நிகழ்ச்சிகளுக்கும் வைபவங்களுக்கும் 180 பேர் ஒரே நேரத்தில் அமர்ந்து உண்ணும் வசதி உண்டு
அனுபவமிக்க சமையற்காரர்களால் உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றன.



விசேஷ ஏற்பாடு
போக்குவரத்திற்குத் தேவையான பஸ், 'மினிகோச்', 'மெர்சிடிஸ்' கார் மற்றும் இதர ஏற்பாடுகளும் முறையாக உங்களின் விருப்பத்திற்கேற்ப செய்து தரப்படும்.

எங்களின் சிறப்புத் தயாரிப்பு
"மிளகாய்முட்டை"

உணவினை இலவசமாகச் சுவைத்துப் பார்க்க உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும் சேவையும் உண்டு.
www.thangamfood.com என்ற இணையப் பக்கத்தின்மூலம் உங்கள் 'ஆர்டர்களைப்' பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவுகளுக்கும் முன்னேற்பாடுகளுக்கும் அழையுங்கள்

த. சரவணன்
83993109



பெருமையோடு உங்களுக்கு நாங்கள் சேவை புரிவோம்.

வாங்க ஒரு முறை! சுவைத்த பிறகு வருவீர்கள் பலமுறை!

நன்றி: தமிழ் முரசு 2009



108

www.testpapersfree.com

B4 சொற்பொருள்

**Q18** முதல் **Q20** வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(6 மதிப்பெண்கள்)**

Q18 திரிந்தார்கள்

(1) விரைந்தார்கள்
(2) ஏங்கினார்கள்
(3) அலைந்தார்கள்
(4) காத்திருந்தார்கள்

Q19 வலிமை

(1) பலம்
(2) துணிவு
(3) திறமை
(4) கவனம்

Q20 பாதுகாப்பாக

(1) ஆத்திரமாக
(2) பணிவாக
(3) மரியாதையாக
(4) பத்திரமாக



107

www.testpapersfree.com

**Q13** முதல் **Q17** வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(10** மதிப்பெண்கள்)

Q13 அரசனின் எண்ணம் என்ன?

(1) திறமையான வேடர்களோடு வேட்டையாட வேண்டும் என்பது
(2) இரண்டு நாட்கள் காட்டில் அலைய வேண்டும் என்பது
(3) திறமையான வீரர்களோடு வேட்டையாட வேண்டும் என்பது
(4) அழகான மானை வேட்டையாட வேண்டும் என்பது

Q14 மான் ஏன் அங்கிருந்து ஓடியது?

(1) தலையை உயர்த்திப் பார்த்ததால்
(2) தனக்கு ஆபத்து என்று உணர்ந்ததால்
(3) வேறு இடத்தில் புல் மேய விரும்பியதால்
(4) அரசன் தன் அழகில் மயங்கியதை அறிந்ததால்

Q15 அரசன் எவ்வாறு சேற்றில் சிக்கிக்கொண்டான்?

(1) மானின் காலடித் தடங்களைப் பின்தொடர்ந்ததால்
(2) பள்ளத்திலிருந்து விடுபட்டு வெளியே வர முடியாததால்
(3) பள்ளத்தைக் கவனிக்காமல் அதற்குள் விழுந்ததால்
(4) மற்றவர்களால் அவனைத் தொடர்ந்து வர முடியாததால்

Q16 எது அரசனை வியப்பில் ஆழ்த்தியது?

(1) தான் கொல்ல நினைத்த மான் தன்னைக் காப்பாற்றியது
(2) தன்னுடன் வந்த எவரும் தன்னைக் காப்பாற்ற வராதது
(3) தான் கொல்ல நினைத்த மான் மனிதக் குரலில் பேசியது
(4) மான் தன்னை அதன் முதுகில் அமரச் சொன்னது

Q17 இறுதியில் மானின் செயல் நமக்கு எதனை உணர்த்துகிறது?

(1) பகைவனிடமிருந்து தப்பி ஓட வேண்டும்
(2) பகைவனாக இருந்தாலும் உதவி செய்ய வேண்டும்
(3) பகைவனிடம் பாதுகாப்பாக நடந்து கொள்ள வேண்டும்
(4) பகைவனின் பதிலை எதிர்பாராமல் செல்ல வேண்டும்



106

www.testpapersfree.com

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

ஒரு காட்டில் பேரழகு வாய்ந்த மான் ஒன்று இருந்தது. அதைப் போன்று அழகான மான் எங்குமே இல்லை என்று கேள்விப்பட்டான் அரசன் ஒருவன். எப்படியும் அந்த மானை வேட்டையாட வேண்டும் என்று நினைத்தான். திறமையான வீரர்களையும் வேடர்களையும் அழைத்துக் கொண்டு வேட்டையாடப் புறப்பட்டான். அவர்கள் மானைத் தேடி இரண்டு நாட்களாகக் காட்டில் திரிந்தார்கள்.

மூன்றாவது நாள் அவர்கள் அம்மான் ஓரிடத்தில் அமைதியாகப் புல் மேய்ந்துகொண்டிருந்ததைப் பார்த்தார்கள். அதன் அழகில் தங்களையே மறந்தார்கள். "நான்தான் அதை வேட்டையாடுவேன். வேறு யாரும் அதை வேட்டையாடக்கூடாது," என்ற அரசன் தன் வில்லில் பாணத்தைப் பூட்டினான். மானுக்குக் குறி வைத்தான். தலையை உயர்த்திப் பார்த்த மான் தனக்கு வந்த ஆபத்தை உணர்ந்து அங்கிருந்து ஓடத் தொடங்கியது.

மானின்மீது பாணத்தை எய்தபடியே அதைத் துரத்தத் தொடங்கினான் அரசன். மான் காடு மலைகளில் எல்லாம் ஓடியது. அரசனும் அதை விடாமல் பின்தொடர்ந்தான். மற்றவர்களால் அவனைத் தொடர்ந்து வர முடியவில்லை. மானும் அவன் கண்களிலிருந்து மறைந்தது. எப்படியும் அதை வேட்டையாட வேண்டும் என்ற வெறியில் அதன் காலடித் தடங்களைப் பின்தொடர்ந்தான். அடர்ந்த காட்டிற்குள் சென்றுகொண்டிருந்த அவன், அங்கிருந்த பெரிய பள்ளத்தைக் கவனிக்காமல் அதற்குள் விழுந்து சேற்றில் சிக்கிக்கொண்டான். அதிலிருந்து விடுபட்டு வெளியே வர எவ்வளவோ முயற்சி செய்தான். அவனால் முடியவில்லை.

"உதவி! உதவி! யாராவது என்னைக் காப்பாற்றுங்கள்," என்று அலறினான் அரசன். அச்சமயம் அவனால் விரட்டப்பட்ட மான் அங்கு வந்தது. அவன் படும் துன்பத்தைப் பார்த்து இரக்கம் கொண்டது. தன் கொம்புகளை அவன் அருகே நீட்டி, "இதை இறுகப் பிடித்துக்கொள்ளுங்கள்," என்று மனிதக்குரலில் சொன்னது. அரசனும் அதன் கொம்புகளைப் பிடித்துக்கொண்டான். மானும் தன் வலிமை முழுவதையும் பயன்படுத்தி அவனை இழுத்தது. அவனும் வெளியே வந்தான். தான் கொல்ல முயன்ற மான் தன்னைக் காப்பாற்றியதே என்று வியந்தான். அவமானத்தால் தலை கவிழ்ந்த அரசன், "மானே! நன்றி," என்றான்.

"இன்னும் உங்களுக்கு வந்த ஆபத்து நீங்கவில்லை. அடர்ந்த காட்டுப் பகுதியில் நீங்கள் இருக்கிறீர்கள். இங்கிருந்து உங்களால் வெளியே செல்ல முடியாது. என் முதுகில் அமர்ந்து கொள்ளுங்கள். உங்களைப் பாதுகாப்பாகக் கொண்டு சேர்க்கிறேன்," என்றது அது.

மானும் அவனை முதுகில் சுமந்துகொண்டு வீரர்கள் இருந்த இடத்திற்கு அருகில் விட்டது. "அரசே! எந்த உயிரினங்களுக்கும் துன்பம் தர வேண்டாம் என்று உங்கள் மக்களிடம் சொல்லுங்கள்," என்று கூறிவிட்டு மன்னனின் பதிலை எதிர்பாராமல் அங்கிருந்து சென்றது மான்.

(மூலம்: 351 நன்னெறிக் கதைகள்)
(பண்பு: உயிர்களிடம் அன்பு காட்டு)



www.testpapersfree.com

A2 செய்யுள் / பழமொழி

**Q7** முதல் **Q12** வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7 ______________________ எழுத்து இகழேல்.

(1) மண்
(2) பண்
(3) கண்
(4) எண்

Q8 அன்பான நண்பனை ____________________ அறியலாம்.

(1) சோகத்தில்
(2) ஆனந்தத்தில்
(3) ஆபத்தில்
(4) அபாயத்தில்

Q9 உண்டிக்கு அழகு ______________________ உண்டல்.

(1) விருந்தோடு
(2) உறவினரோடு
(3) நண்பர்களோடு
(4) விருந்தினரோடு

Q10 ______________________ பாராத வேலை ஒரு முழம் கட்டை.

(1) இளையவன்
(2) உடையவன்
(3) உறவினன்
(4) மற்றவன்

Q11 அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ______________________ என்பும் உரியர் பிறர்க்கு.

(1) கண்ணுடையார்
(2) அன்புடையார்
(3) பண்புடையார்
(4) அறிவுடையார்

Q12 காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ______________________ மாணப் பெரிது.

(1) ஞாலத்தின்
(2) காலத்தின்
(3) தெய்வத்தின்
(4) வாரத்தின்



www.testpapersfree.com

Q4 (1) அவர்களின்
(2) அவர்களை
(3) அவர்களுடன்
(4) அவர்களில்

Q5 (1) தண்ணீரில்
(2) தண்ணீருடன்
(3) தண்ணீரிலிருந்து
(4) தண்ணீரிடமிருந்து

Q6 (1) தன்னால்
(2) தன்னுடைய
(3) தன்னிடமிருந்து
(4) தன்னுடன்



www.testpapersfree.com

SA1 தாள் -2

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

'அ' பிரிவு

A1 வேற்றுமை

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

பாபு என்ற சிறுவன் கண் பார்வையற்றவன். ஒரு நாள் அவன் ஒரு (Q1) _______ அருகில் நடந்து சென்றுகொண்டிருந்தான். திடீரென்று அவன் கால் தடுக்கி அந்தக் கால்வாயினுள் விழுந்துவிட்டான். (Q2) _______ நீச்சல் தெரியாது. ஆகவே, அவன் தண்ணீரில் தத்தளித்தான். அதை யாரும் கவனிக்கவில்லை.

கால்வாயின் ஓரமாக ஒரு நாய்க்குட்டி படுத்திருந்தது. பாபு (Q3) _______ கண்ட நாய்க்குட்டி சத்தம் போட்டுக் குரைத்தது. நாய்க்குட்டியின் சத்தம் கேட்டுப் பலர் அங்கு ஓடி வந்தனர். பாபுவைத் தண்ணீரில் கண்டதும் (Q4) _______________ ஒருவர் உடனே கால்வாயில் குதித்தார். அவர் பாபுவைத் (Q5) _______ வெளியே தூக்கி வந்தார். பாபுவுக்கு முதலுதவி செய்தார். அவன் உயிர் பிழைத்தான்.

நாய்க்குட்டி குரைத்துத் தன்னைக் காப்பாற்றியதை அறிந்த பாபு நாய்க்குட்டியைத் (Q6) _______ தூக்கிச் சென்றான். நாளடைவில் நாய்க்குட்டியே பாபுவுக்கு வழிகாட்டியாக இருந்தது.

(மூலம்: சிறுவர்களுக்கு அமுதமான கதைகள்)
(பண்பு: பிறருக்கு உதவுதல், நன்றியுணர்வு)

Q1
(1) கால்வாயில்
(2) கால்வாயின்
(3) கால்வாயிலிருந்து
(4) கால்வாயை

Q2
(1) பாபுவுக்கு
(2) பாபுவால்
(3) பாபுவை
(4) பாபுவினது

Q3
(1) தத்தளிப்பதால்
(2) தத்தளிப்பதை
(3) தத்தளிப்பதற்கு
(4) தத்தளிப்பதில்



www.testpapersfree.com

SA1 தாள் - 2

PRIMARY SCHOOL

பெயர் : ______________________ தேதி : ____________________

வகுப்பு : தொடக்கநிலை 5 ________

கட்டுரை

ஐயோ! பாம்பு!




மாலை வேளை
சிறுமியர்
கயிற்றாட்டம்
எதிர்பாராமல்
ஊர்ந்து
அதிர்ச்சி
அலறினர்
அவ்வழியாக
சத்தங்கேட்டு
கம்பால்

101